ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2032/33 - 2017 අගෝස්තු මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.08.17
2032/33 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை விவசாயச் சேவை தொடர்பான சேவைப் பிரமாணக் குறிப்பு**
2 வது திருத்தம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2016.06.15 ஆம் திகதிய 1971/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்ட, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.09.19 ஆம் திகதிய 1880/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை விவசாயச் சேவை தொடர்பான சேவைப் பிரமாணக் குறிப்பு கீழ்க் காட்டப்பட்டவாறு திருத்தப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச்.எம். காமினி செனவிரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2017, ஓகத்து 17.

(01) 6.1 உப பந்தியின் கீழ் காட்டப்பட்ட அட்டவணை நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக புதிதாக 6.1 எனும் அட்டவணை பதிலீடு செய்யப்படுகின்றது. விவசாய அபிவிருத்தி, விவசாய ஆராய்ச்சி, விவசாயப் பொருளியல் மற்றும் பொதுப் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை.

| *தரம்* | *சம்பளக் குறியீடு* | *விவசாய அபிவிருத்தி பிரிவு* | *விவசாய ஆராய்ச்சி பிரிவு* | *விவசாயப் பொருளியல் பிரிவு* | *பொதுப் பிரிவு (ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளுக்குரிய)* | *பதவிகளின் மொத்த எண்ணிக்கை* |
|---|---|---|---|---|---|---|
| விசேட தரம் | SL-03-2006 | 1 | - | - | 4 | 5 |
| I | SL-03-2006 | 47 | 50 | 2 | 38 | 137 |
| II | SL-03-2006 | 84 | 28 | 2 | 28 | 142 |
| II/III | SL-03-2006 | 126 | - | 1 | 4 | 131 |
| III | SL-03-2006 | 342 | 382 | 23 | - | 747 |

6.2 உப பந்தி கீழ்க் காட்டப்பட்டவாறு திருத்தப்படுகின்றது.

இணைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை – 1,157

தரத்திலிருந்து தரத்திற்கு பதவியுயர்த்துவதற்காக III, II, I தரங்கள் இணைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைக்கு உரியதாகக் கருதப்படும்.

(02) 7.1 உப பந்தியில் காட்டப்பட்ட குறிப்பு நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக புதிய குறிப்பு 2 பதிலீடு செய்யப்படுகின்றது.

*குறிப்பு 2.* - அந்தந்தப் பிரிவுகளின் கீழுள்ள பதவிகளின் எண்ணிக்கை கீழ்க் காட்டப்பட்டவாறாக இருக்கும். அந்தந்த பிரிவுகளின் கீழ்க் காணப்படுகின்ற பதவி வெற்றிடங்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படும்.

விவசாய அபிவிருத்தி - 472
விவசாய ஆராய்ச்சி - 382
விவசாயப் பொருளியல் - 24

கமத்தொழில் அமைச்சின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள இலங்கை விவசாயச் சேவையின் தரம் II/III இற்குரிய 04 பிரதி/ உதவிப் பணிப்பாளர் பதவிகளையும், இலங்கை விவசாயச் சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை சீராக்கம் செய்யும் போது விவசாய அபிவிருத்திப் பிரிவிற்குரியதாகக் கருதி 472 பதவிகளாக அப் பதவியணியின் கீழ் உட்சேர்க்கப்பட்டுள்ளது.

(03) முதலாம் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள அட்டவணையில் "தொடர் இல. 6" மற்றும் "தொடர் இல. 19" என்பன கீழ்க் காட்டப்பட்டவாறு திருத்தப்படுகின்றது.

| *தொடர் இல.* | *அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்* | *நிறுவனம்* | *பதவிகளின் எண்ணிக்கை* | *உரிய பிரிவு* | *தரம்* |
|---|---|---|---|---|---|
| 6 | பணிப்பாளர் (விவசாய மற்றும் கமநல சேவை அபிவிருத்தி)<br>பணிப்பாளர் (விவசாய உள்ளீடு முகாமைத்துவம்)<br>பணிப்பாளர் (விவசாயத் தொழில்நுட்பம்)<br>பணிப்பாளர் (கூட்டுமுயற்சியும், உறவுகளும்) | கமத்தொழில் அமைச்சு | 04 | விவசாய அபிவிருத்தி/ விவசாய ஆராய்ச்சி/ விவசாயப் பொருளியல் | I |
| 19 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (விவசாய மற்றும் கமநல சேவை அபிவிருத்தி)<br>பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (விவசாய உள்ளீடு முகாமைத்துவம்)<br>பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (விவசாயத் தொழில்நுட்பம்)<br>பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (கருத் திட்டங்கள்) | கமத்தொழில் அமைச்சு | 04 | விவசாய அபிவிருத்தி/ விவசாய ஆராய்ச்சி/ விவசாயப் பொருளியல் | II/III |

8 - 1103

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.